★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 22 ஸபர் 13 இதழ் 266
யாழ்ப்பாணம் புதன்கிழமை 7-11-84

## இந்திராவின் நிறைவேறாத கடைசி ஆசைகள்!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் கடைசி ஆசைகள் நிறைவேறவில்லை.

அவர் தனது கண்களைத் தானம் செய்து எவருக்காவது ஒளிகொடுக்கவேண்டுமென்று விரும்பினர்.

அவர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இலக்கானதும், சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டாரல்லவா! நீண்டநேரம் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதால், அவர் கண்கள் உபயோகப்படுத்தமுடியாத நிலைக்குள்ளாகிவிட்டன

இந்திராவின் கண்களை உபயோகிக்கலாமா என்று பரிசீலித்தோம். ஆனால் பயனற்றவை என்பதை முடிவுசெய்தோம் என்று சத்திர சிகிச்சை செய்த டாக்டர்களில் ஒருவரான டாக்டர் மதன்கோபால் தெரிவித்தார்.

தனது சிறுநீரகத்தை வேறொருவருக்கு வழங்க வேண்டுமென்றும் விரும்பினர். இரண்டு குண்டுகள் அவர் சிறுநீரகத்தைத் துளைத்து நாசமாக்கிவிட்டதால், அதுவும் பயன்படுத்த முடியாத ஒன்ருகிவிட்டது.

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### சிங்கராயர் பிணைமனு விசாரணை

(கொழும்பு)

தம்மைப் பிணையில் விடுவிக்கக்கோரி வண பிதா சிங்கராயர் தாக்கல் செய்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதி

(5ம் பக்கம் 5ம் கலம்பார்க்க)

## வீடு தீக்கிரை; எரிந்த நிலையில் சடலம் மீட்பு நாச்சிமார் கோவிலடியில் பதற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்குச் சமீபத்தில் நேற்றுக்காலை நடந்த சம்பவத்தின் போது வீடொன்று தீக்கிரையானது. இந்த வீட்டுக்குள் எரிகாயங்களுடன் இருந்த சடலமொன்று பின்னர் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

காங்கேசன்துறை வீதியில், நாச்சிமார் கோவிலுக்கும், பூனரி மரத்தடிக்கு மிடையில் இந்த வீடு எரிந்த நிலையில் காணப்பட்டது.

முன் பக்கம் தகரத்தால் அடைக்கப்பட்டிருந்தது வீட்டுவளவிற்குள் மோட்டார் சைக்கிள் ஒன்றும், சைக்கிள் ஒன்றும் எரிந்த நிலையில் காணப்படுகிறது.

வீட்டின் மண்டபத்தில் ஒரு அலுமாரியும் ஒரு வாங்கும் எரிந்த நிலையில் காணப்பட்டது. வீட்டின் கூரையும், முன்பகுதியும் எரிந்தநிலையிலுள்ளது

(5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு — வட பகுதியில் கட்டாயசேவை

(இ. கந்தசாமி)

**எந்த ஒருபொலிஸ் உத்தியோகத்தரும் வட பகுதியில் கட்டாயமாகச் சேவையாற்றவேண்டும். இந்த விடயத்தில் எவருக்கும் சலுகை அளிக்கப்படமாட்டாது.**

அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று ஜனதிபதி தலைமையில் நடந்தபோது, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

''ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரும் குறைந்தது ஆறு மாதங்கள் வடபகுதியில்சேவையாற்றவேண்டும் இதிலிருந்து யாருக்கும் விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது. ஒருவருக்கு விதிவிலக்கு அளித்தால், ஏனையோருக்கும் அவ்வாறு செய்யவேண்டி ஏற்படும். சுகயீனம், திருமணம் போன்ற காரணங்களுக்காக இந்த விதி விலக்குப் பற்றி ஆராயலாம் எனினும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்னெரு வேளையில் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு வடபகுதியில் கடமையாற்றவேண்டும்''.

### பட்ஜட்: லலித்விவாதத்தை ஆரம்பித்துவைப்பார்

[கொழும்பு]

இம்மாதம் 15ம்திகதி ஆரம்பமாகும் 'பட்ஜட்' விவாதத்தை அரசாங்கத்தின் சார்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியே ஆரம்பித்துவைப்பதென நேற்று ஜனதிபதி தலைமையில் கூடிய அரசாங்கப் பாராளுமன்றக் குழு ஏகமனதாக முடிவு செய்தது.

### உரும்பராயில் நேற்றிரவு இரு இளைஞர் பலி

[யாழ்ப்பாணம்]

உரும்பிராயில் நேற்று இரவு ஆயுதப்படையினர் சுட்டதில் இரு இளைஞர்கள் பலியுண்டார்கள்.

(5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

### ரஜீவை அமிர் சந்தித்தார்

(புதுடில்லி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நேற்று புதுடில்லியில் புதிய பிரதமர் ரஜீவ்காந்தியைச் சந்தித்து, திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்கு இலங்கைத் தமிழர்கள் சார்பில் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், திருகோணமலை முன்னள் எம். பி. திரு. இரா சம்பந்தன் ஆகியோரும் உடன் இருந்தார்கள்.

### மாணவரை விடுவிக்கக்கோரி மூன்று நாள் பகிஷ்கரிப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய மாணவர்கள் மூன்று நாள் பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.

கைதான சக மாணவர்கள் மூவர் விடுதலை செய்யப்படாததை ஆட்சேபித்தே மாணவர்கள் நேற்றுமுதல் மூன்று நாட்களுக்கு பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து மாணவர் மன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவிக்கையில், வித்தியாலயத்தைச் சேர்ந்த நான்குபேர் கைதானர்கள் என்றும், இவர்களில் ஒருவர் மட்டுமே விடுதலை செய்யபட்டுள்ளார் என்றும் கூறினர்.

### இந்திராவின் அஸ்தி: சத்வால் முயற்சி

[கொழும்பு]

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அஸ்தி இலங்கைக்கு எடுத்து வரப்படுவது பெரும்பாலும் சத்தியமாகுமெனத் தெரிகிறது

அஸ்தியை இலங்கைக்கு எடுத்துவரும் முயற்சியில் தற்போது இந்தியத் தூதுவர் திரு எஸ். ஜே எஸ். சத்வால் ஈடுபட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பிரஜைகள்

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

### முல்லைத்தீவு சம்பவம்: 7 பேர் பலி; 8 பேர் கைது!

[கொழும்பு]

முல்லைத்தீவில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே நடைபெற்ற மோதலில் 7 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென்றும், 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முள்ளியானிலுள்ள காட்டுப் பகுதியை இராணுவத்தினர் முற்றுகையிட்டபோதே இந்த மோதல் இடம்பெற்றதாகக்

[5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

### உமாமகேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை

((புதுடில்லி)

திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்குத் துக்கம் தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாண மாவட்டத்

(5-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

### மட்டக்களப்பில் கைதான டாக்டர்கள், தாதிகள் விடுதலை

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளுக்கு மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சையளித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 3 வாரகாலமாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த 2 டாக்டர்களும் 2 தாதிமார்களும், அற்றென்டன் ஒருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

டாக்டர் கௌரி மோகன், டாக்டர் பிரேமச்சந்திரன் ஆகிய இரு டாக்டர்களும், தாதிகளான திருமதி அம்பிகா கமலநாதன், திருமதி கிருபா மாணிக்கவாசகரும், அற்றென்

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

### நியூயோர்க்கில் எம். ஜி. ஆர். உற்சாகமாக இருக்கிறர்!

(நியூயோர்க்)

சிகிச்சைக்காக நேற்றுமுன் தினம் இரவு மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து 'போயிங்' தனி விமானத்தில் புறப்பட்ட தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று இரவு இலங்கை நேரப்படி எட்டுமணிக்கு நியூயோர்க்

(5-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அளவெட்டி தெற்கு, சங்கக் கடை, பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் 3½ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விலை 4இலட்சம் மட்டில் குத்தகைக்கும்கொடுக்கலாம். தொடர்பு: ஸ்பென்சர், பொன்னுத்துரை வளவு, அளவெட்டி தெற்கு. 603

இறைச்சிக் கோழிகள் உடனடி விற்பனைக்குண்டு, விலை குறைவு. சிமாட்டி பாம்ஸ், ஸ்டேசன் வீதி, மயிலங்காடு, சுன்னாகம். 600

கிளிநொச்சியில் கண்டிரோட்டில் வீடுகள் கடைகள் கட்டக்கூடிய மேட்டுக் காணியும், நெற்காணியும் ஒரு ஏக்கருக்கு இரண்டு போகத்திற்கு 160 புசல் விளைகிறது. உடன் விற்கப்படும். சொந்தக்காரர் பிறநாட்டுக்கு போகிறுர்கள். எழுத்து மூலம் விளம்பரதாரருடன் தொடர்பு கொள்ளவும். மே/பா, தோமஸ், 50/1, கோவில் வீதி, சாவகச்சேரி. 586

மன்னரில் கட்டுக்கரைக் குளப் பாய்ச்சலில் 5 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.செல்வத்துரை, குப்பிளான் தெற்கு அல்லது செ. சுந்தரலிங்கம், அரிசிஆலை, ஆள்காட்டிவெளி 596

## தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. (Broiler) இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணு பாம், இணுவில். 595

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் நாலு அறைகள் கொண்ட புதிய வீடு, யாழ். 37ம் இலக்க மாட்டின் ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: ராதா, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாண முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். 588

## சோதிடம்

ஞாயிறு போயா தினங்களில் நேரடியாகச் சந்திக்கலாம். நீங்களின் வெற்றியையும்,எம். ஜி. ஆரின் கஷ்ட காலத்தையும் முன்கூட்டியே அறிவித்த சோதிடர்: V. A. சிவராசா, வேலணை. 590

## FOR SALE

Annexe for small family available first December. Encyclopedia, (Children's) ten volumes for sale. 78, Temple Road, Chundikuli. 582

## வந்துவிட்டார்

''டாக்டர் S. தம்பித்துரை (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு) பரிட்சை நோக்கமாக இந்தியா சென்றிருந்தவர் தாயகம் திரும்பிவிட்டார். ஜனன ஜாதகக் குறிப்புகள் எடுக்க விரும்புவர்கள் வந்து பெற்றுக்கொள்க.'' 607

---

## உழைக்கும் மக்களின் வழிகாட்டி

மார்க்சும் ஏங்கல்சும் 1848ல் எழுதிய
''கம்யூனிஸ்ட் அறிக்கை''
உலகத் தொழிலாளர்களது முதல் புரட்சிகர வேலைத்திட்டம் ஆகும்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என்ற கோஷத்தின்கீழ் இன்றும்இவ்வறிக்கை உழைக்கும்மக்களுக்கு முதலாளித்துவத்தின்கீழ் தம்மைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி, முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டுவது எப்படி, சோஷலிச சமுதாய அமைப்பை நிறுவுவது எப்படி என்பன பற்றி வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

இவ்வறிக்கை பற்றியும் தொழிலாளி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியும் அறிய, நம்நாட்டின் புரட்சி இயக்கத்தின் முதுபெரும் அனுபவமிக்க அங்கத்தவரும், சட்டத்தரணியுமான

தோழர் த. துரைசிங்கம்
எழுதிய
'லெனினும் ஆசியாவும்''
என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூல் புத்தகசாலைகளில் கிடைக்கும். விலை ரூபா 10/-

**சோஷலிச ஆய்வுக் கழகம்,**
31, வில்சன் வீதி, கொழும்பு 12, (594)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

நிகழும் இரத்தாட்சி ஆண்டு ஐப்பசித்திங்கள்
25-ம் நாள் (10 11-84) சனிக்கிழமை
நண்பகல் 12 மணிக்கு வரும் சுபவேளையில்

| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
|---|---|
| தா. சிவசம்பு | சந்திரஞானம்மா சங்கரப்பிள்ளை |
| (அதிபர், மு/யோகபுரம் மகாவித்தியாலயம்) அவர்களுக்கும் | (திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர், கச்சேரி, வவுனியா) அவர்களுக்கும் |

தொண்டைமானறு செல்வச்சந்நிதியில்
திருமணம் நிகழவிருப்பதால்

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்பசமேதராக வருகை தந்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு: மணமகன் இல்லத்தில் 11-11-84 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணி.

| திருமதி | திருமதி |
|---|---|
| ச. தாமோதரம்பிள்ளை, | எஸ். சங்கரப்பிள்ளை, |
| விதானையார் ஒழுங்கை. | கோண்டாவில் கிழக்கு, |
| மல்லாகம். | கோண்டாவில். |

4-11-84. (572)

---

அன்னை இந்திராவின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
M. G. M. FORAGE STORES

## இலங்கை எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனம்

(CEYLON OILS AND FATS CORPORATION SEEDUWA)

யாழ், திருநெல்வேலி உற்பத்திப் பொருட்கள்
**விற்பனையாளர்கள்**

என்பவர்களால் தயாரிக்கப்பட்ட
முட்டையிடும் கோழித்தீன், வளரும் கோழித்தீன், குஞ்சுத்தீன்
BROILER STARTER, BROILER FINISHER

மற்றும்.........

பிண்ணாக்கு, தவிடு, கோது, சோளம், மீன்தூள், எள்ளுப்பிண்ணாக்கு, சிமெந்து,
கால்நடை மருந்து வகைகளும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்குமிடம்:

SYMBOL OF QUALITY MGM

**M. G. M. FORAGE STORES**

இல. 208, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்,
(முதலாம் குறுக்குத்தெரு சந்தி)
தொலைபேசி: 22611
தொலைபேசி மூலம் ஓடர்கள் எடுக்கப்படும்.
(498)

---

## நன்றி

கடந்த 29-10-84 அன்று காலம்சென்ற முன்னுள் மெதடிஸ்த திருச்சபையின் உபதேசியார்-சாமுவேல் சாலோமனின் இறுதி வழிபாட்டில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறிய யாவருக்கும், சிறப்பாக திரு. ஏ. ஜே. வி. கனகரெத்னத்துக்கும், பரி ஜூக்கா மருத்துவமனை ஊழியர்கள் யாவருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளும், வாழ்த்துக்களும்.

திருமதி. லில்லிநேசம் சாலோமன்.
பிள்ளைகள். 601

---

## கூலியாட்கள் தேவை

சவுதி அரேபியாவில் தெருக்கள் துப்புரவு செய்யும் வேலைக்கு திடகாத்திரமும், நல்ல ஆரோக்கியமும், கடின உழைப்பும் கூடிய கூலியாட்கள் தேவை. விண்ணப்பதாரரின் பாரம் சுமக்கும் திறமை பரிட்சிக்கப்படும். சம்பளம் 525 சவுதி றியால்கள். பாஸ்போட் மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் 1984 நவம்பர் 7-ந் திகதி புதன்கிழமைக்கு முன் நேரில் வரவும்.

**CONSTRUCTION AND DEVELOPMENT CO. LTD.**
37,S De S JAYASINGHE MAWATHA, NUGEGODA.
Telephone: 552307, 554541

Labour Licence No: 96 (569)

---

# Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

- சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- T. V. மேசை,
- தண்ணீர்த் தாங்கி,
- WASH BASIN,
- TEAPOYS, ★ CENTRE TABLE,
- VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்,

**TRADE CENTRE,**
**ஹோம் பினன்ஸ் லிமிட்.,**
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

---

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இல, ஈடு/14295
யாழ்ப்பாணம், மவுண்ட்கார்மல் ரோட் வயிரவநாதர் செல்லத்துரை
வழக்காளி
மாதகல் குசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
பெண் பிலோமினு
எதிராளிகள்

ஈடு/14295 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1984-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் திகதி புதன்கிழமை (28-11-1984) முற்பகல் 10 00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல் வட்டி ரூ. 7610/-மேலும் இதில் ரூ. 4950/-க்கு 8-3-1974 தொடக்கம் 25-3-1975 வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூ- 455/65 சதம்: மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும் (இதில் 27-10-80-ல் 1500/-ம், 11-2-82-ல் 3500/- முதலிலும் வட்டியிலும் ஓர் பகுதியாகவும் ரூ. 250/- மேற்காட்டிய வழக்குச் செலவில் ஒரு பகுதியாகவும் கழித்து.)

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை ''நமனச்சியா தோட்டமும் இராசாவத்தையும் காரியத்தோட்டம் பீக்கிடிளாணயும் தாலேதிக்கியும் பரப்பு நில. இலா 4, குளி 3 வீடும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு கை ஒழுங்கையும் கயித்தாம்பிள்ளை செல்வராசாவுக்குரிய காணியும் தெற்கு பேதுருப்பிள்ளை கவுரியேற்பிள்ளைக்குரிய காணி இதடங்கலும்

வ. சி. மகாதேவன்
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
553, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 610

# "வலுவான, உறுதியான இந்தியாவை மக்கள் கட்டியெழுப்ப வேண்டும்!"

## பிரதமர் ரஜீவ் அறைகூவல்!!

## நாடு வழமைக்குத் திரும்புகிறது

(புதுடில்லி)

"ஒற்றுமை, உறுதிப்பாடு கொண்ட வலுவான இந்தியாவின் வளர்ச்சிக்கு அனைத்து மக்களும் உழைக்க வேண்டும்" என்று இந்தியாவின் புதிய பிரதமர் திரு ரஜீவ் காந்தி மக்களிடம் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்து ஆறுதல் கூற வந்த மக்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மறைந்த நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி இந்தியாவின் ஒற்றுமை, வலுவான பாதுகாப்பு பொருளாதார முன்னேற்றம் என்பவற்றுக்காக உழைத்து அதற்காகவே இறந்தார்.

அவரது வழியைப் பின்பற்றி ஏழைகளின் பொருளாதார மேம்பாட்டுக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அனைத்து மக்களும் உழைக்க வேண்டும்.

"சில தீயசக்திகள் நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கபெரும் முயற்சி செய்து வருகின்றனர். இவர்களை மக்கள் இனம்கண்டு அவர்களுக்கு எதிராகப் போராட வேண்டும்" என்றார்.

அதேவேளை வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட டெல்லி பிரதேசத்துக்கு உதவுமுகமாக பிரதமர் திரு ரஜீவ் காந்தி பல மறுவாழ்வுத் திட்டங்களை அறிவித்துள்ளார். இதன்படி இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா 10, 000 ரூபாவும், காயப்பட்டவருக்கு தலா 2, 000 ரூபாவும் வழங்கப்படும். ஒருவரது வீடு முற்றாக சேதமாக்கப்பட்டால் 10,000 ரூபாவும், ஒருபகுதி சேதமாக்கப்பட்டால் 2,000ரூபாவும் வழங்கப்படும். இது தவிர வீடுகளை அமைப்பதற்கும், வாகனங்களை இழந்தவர்கள், மற்றும் தொழில் கருவிகளை இழந்தவர்களுக்கும் வர்த்தக வங்கிகளில் விசேட சலுகைக் கடன்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றை விட நிவாரணப் பணிகளுக்காக இரண்டு உயர்நிலைக் கமிட்டிகளை அமைத்துள்ளார்.

தற்போது இந்தியாவின் சகல பகுதிகளிலும் அமைதி பேணப்படுகிறது.

## பிரதமரின் செயலாளர் அலெக்சாண்டர்

(புதுடில்லி)

மறைந்த பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் பிரதம செயலாளராக கடமையாற்றிய அலெக்சாண்டரை தமது பிரதம செயலாளராகவும் கடமையாற்றுமாறு பிரதமர் ரஜீவ் காந்தி கேட்டுள்ளார்.

கடந்த இரு நாட்களிலும் தகாத சம்பவங்கள் ஏதும் நடந்ததாக அறிவிக்கப்படவில்லை. (சூ)

## மதுரை முத்து காலமானார்

(மதுரை)

மதுரையின் முன்னாள் மேயரும் பிரபல சமூக சீர் திருத்தவாதியுமான மதுரை எஸ். முத்து நேற்று முன் தினம் காலமானார்.

கடந்து நான்கு நாட்களாக சுகவீன முற்றிருந்த அவர் நேற்றுமுன்தினம் காலை மார்பு வலிஏற்பட்டதன் காரணமாக மதுரையிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அன்று மாலையே காலமானார். அவருக்கு வயது 69 ஆகும்.

பகுத்தறிவுத் தந்தை ஈ.வெ. ரா.பெரியாரின் கொள்கைகளை பின்பற்றி வந்தமதுரை முத்து, 1949ம் ஆண்டு அறிஞர்அண்ணா தி. மு.க. வை ஆரம்பித்த போது அதில் சேர்ந்தார். 1965 இல் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அவர் சிறை சென்றார்.

1971 வரை மதுரை நகராட்சியின் தலைவராக விருந்து அந்த ஆண்டு மதுரை மாநகராட்சிக்கு உயர்ந்தபோது அதன் முதல் மேயராகவும் கடமையாற்றினார். பின்னர் அண்ணா தி.மு.க.வில் சேர்ந்து 1978 இல் மீண்டும் மேயராகி இரண்டு ஆண்டுகள் அப் பதவியை வகித்தார்.

இவரது மறைவு குறித்து தமிழகத்தின் பலதலைவர்களும் இரங்கல் செய்தி அனுப்பியுள்ளனர். தமிழ்நாடு காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு நெடுமாறன் விடுத்துள்ள செய்தியில் :- காலஞ்சென்ற மதுரை முத்து "கட்சி வேறுபாடின்றி இலங்கைத்தமிழ்மக்களுக்காக அரும்பாடுபட்டவர். தமிழ் மக்களின் வேதனை மிகுந்த காலப் பகுதியில் அவர் மறைந்தது ஈடு செய்யமுடியாத இழப்பாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மாநில உணவு அமைச்சர் ஆர். வீரசாமி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தமிழ்நாடு செயலாளர் நல்லசிவன், திராவிடக் கழகச் செயலாளர் திரு சி. வீரமணி ஆகியோரும் இரங்கல் செய்தி அனுப்பியுள்ளனர். (சூ)

## முன்னாள் இராணுவத்தளபதி வழக்கு

மணிலா நவ, 5

பிலிப்பைன்ஸ் எதிர்கட்சித் தலைவர் அக்கியூனோ கொலைச் சம்பவம் தொடர்பாக பிலிப்பைன்ஸின் முன்னாள் இராணுவத் தளபதி உட்பட 26 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத் தகவலை பிலிப்பைன்ஸின் பிரதான வழக்கு தொடுநர் தெரிவித்தார். (சூ)

## 36 தடவைகள் அரவம் தீண்டி மரணம்!

(கொழும்பு)

36 தடவைகள் அரவம் தீண்டிய பெண் தோட்டத் தொழிலாளி (40 வயது) ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரு தினங்களின்பின் மரணமானார்.

இவரின் சடலத்தை அடக்கம் செய்வதற்குத் தோட்டநிர்வாகம் எதுவிதமான உதவியையும் வழங்காததினால் தோட்டத் தொழிலாளர்கள் நிதி சேகரித்து இப்பெண்ணின் சடலத்தை அடக்கம் செய்தனர். (வெ)

## அமெரிக்க ஜனாதிபதி

"வரிச்சுமைகளிலிருந்து காப்பாற்றுவேன்"
—மொன்டேல்

"உறுதியான அமெரிக்காவே எனது குறிக்கோள்"
—ரீகன்




தேர்தல்—84

வாஷிங்டன், நவ. 6

"வரிச்சுமைகளிலிருந்து அமெரிக்க மக்களைக் காப்பாற்றி பொருளாதார சுபீட்சத்தை உண்டுபண்ணுவேன். சர்வதேச ரீதியில் அணுஆயுத கட்டுப்பாட்டை மேற்கொண்டு போர் அபாயங்களைத் தவிர்ப்பேன்" இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வோல்ட்டர் மொன்டேல் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்ட வாறு உறுதியளித்தார்.

திரு, மொண்டேல் மேலும் கூறியதாவது, "திரு. ரீகனின் கொள்கைகள் அமெரிக்காவுக்கு ஆபத்தானவை. அவரால் வரிச்சுமைகளிலிருந்து அமெரிக்கர்களை காப்பாற்ற முடியாது" என்றார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் திரு. ரீகனுக்கே கூடுதல் வாய்ப்புக் காணப்படுவதாகக் கூறப்பட்டது. அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 45ல் அவர் பெரும்பான்மை வெற்றியீட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் இறுதிநேர அபிப்பிராய வாக்கெடுப்பொன்று திரு. மொன்டேல் தமது இடைவெளியை வெகுவாகக் குறைத்து முன்னேறியுள்ளார், என்று தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகள் யாவும் 7-ந் திகதி அதிகாலை (இன்று) தெரிந்து விடும்.

திரு ரீகன் தமது பிரசாரங்களை முடித்துவைத்துப் பேசியபோது, "அமெரிக்கா உறுதியாகவும், பொருளாதார, இராணுவ பலத்துடன் இருக்கவும் பாடுபடுவதே எனது கடமை என்றார்

அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் திரு. ரீகனுக்குப் பெருமளவு சாதகமாகவே இருக்கின்றன. ஆயினும் அவர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை தமது பிரசாரங்களில் பின்னணியில் நிற்கும் ஒரு வேட்பாளர் போன்றே அவர் கடுமையாக உழைத்தார் என்று கூறப்படடது. (கி)

## தேர்தல் செய்திகள்

## இந்தியாவின் புதியபிரதமருக்கு வாழ்த்து

[உடுவில்]

"இலங்கை வாழ் தமிழ் மக்களின் மனதில் நிலைத்துவிட்ட அன்னை இந்திரா காந்தியைப் போல ஈழத்தமிழ் மக்களின் துயர்துடைக்கக் கூடிய நடவடிக்கைகளை துரிதமாகசெயல்படுத்தும்வல்லமை உங்களுக்கு உண்டு. தமிழ் மக்களின் துயர் துடைக்கும் ரட்சகராக நீங்கள் விளங்கவேண்டுமெனக் கேட்டு பாரதத்தின் அரசியலில் அன்னைவழிநின்று நடுநிலைக் கொள்கையை கடைப்பிடித்து பல்லாண்டு வாழ்ந்து சேவை புரிய வாழ்த்துகின்றோம்."

உடுவில் இளைஞர் ஒன்றியம் புதிய பாரதப் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு ரஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. உடுவில் இளைஞர் கழக செயலாளர் திரு வி. பரமேஸ்வரன் வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.


இது உங்கள் மேலதிக நுழைவுக் கூப்பன்

லக்ஸ்பிறே

மாபெரும் கேள்விப் போட்டியில்
முதலாம் பரிசு
ரூ.100,000/-
அல்லது மூவருக்கு ஜப்பான்
டிஸ்னிலாண்ட்
சுற்றுலா.
மேலும்
ரூ.175,000/-
பெறுமதியான மகத்தான பரிசுகள்
இன்றே பிரவேசியுங்கள். விபரங்கள் பத்திரிகைகளில்

வெல்லுங்கள்!
ரூ.275,000/-
பெறுமதியான பரிசுகள்.




இது உங்கள் மேலதிக நுழைவுக்கூப்பன்,
ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கும்
லக்ஸ்பிறே போட்டியின் விதிகளையும், விபரங்களையும் பின்பற்றுங்கள்.
நீங்கள் லக்ஸ்பிறே போட்டியில் வெற்றியீட்ட வேண்டுமென்றால்...
கீழே தரப்பட்டுள்ள கேள்விகளை கவனமாகப் படித்து, சரியான
விடைக்கெதிரே கூடுகளில் உள்ள சதுரங்களில் சரியெனக் குறியிடுக.
ஒவ்வொரு நுழைவிலும் லக்ஸ்பிறே (LAKSPRAY) எனும் பதம் 500 கிறாம்
பக்கட்டிலிருந்து நான்கு அல்லது 250 கிறாம் பக்கட்டிலிருந்து ஆறு
வெட்டி யெடுத்து அத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
நுழைவுகளை அனுப்ப வேண்டிய முகவரி:-
'லக்ஸ்பிறே போட்டி' த.பெ.எண் 1479, கொழும்பு
போட்டி முடிவு நாள் 1984 ஆண்டு டிசம்பர் மாதம் 05 ம் திகதி

நுழைவுக் கூப்பன்.
(1) லக்ஸ்பிறே பால்மா இரண்டு தேசங்களில் இருந்து இறக்குமதி செய்யப் படுகின்றது.
(✓) சரி என்ற குறியை சரியான விடைக்கெதிரே உள்ள கூடுகளில் இடுக.

| | |
|---|---|
| தாய்லாந்து | |
| ஒல்லாந்து | |
| நியூசிலாந்து | |
| சீனு | |

(2) லக்ஸ்பிறே பக்கட்டுகள் இரண்டு அளவுகளில் விற்கப் படுகின்றன. அவற்றின் நிறையாது, சரியான விடைக்கெதிரே (✓) எனும் குறியை இடுக.

| | |
|---|---|
| 100 கிறாம் | |
| 250 கிறாம் | |
| 400 கிறாம் | |
| 500 கிறாம் | |

பெயர்: ____________
விலாசம்: ____________
வயது: ____________
வியாபாரியின் பெயர்: ____________
வியாபாரியின் விலாசம்: ____________

ZENITH
Licence No S/411

### மணிவாக்கு

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்மினே.

—திருமந்திரம்

## நமது நோக்கு

# அன்னை இந்திராவின் வழியில் மகன் ரஜீவ்

இந்திரா காந்தியின் படுகொலையையடுத்து பாரத தேசம் சின்னுபின்னமாகிவிடும், ஒருமைப்பாடுகுலைந்துவிடும், மதச்சார்பின்மை மறைந்துவிடும், அராஜகம் தலைதூக்கி உள்நாட்டுக்கலவரங்கள் வெடித்துப் பரவும். அதனல் அந்த நாட்டின் உறுதிப்பாடு உருக்குலைந்துவிடும் என்றெல்லாம் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களின் எண்ணங்களில் மண்ணைத் தூவும் விதத்தில் அங்கு நிலைமைகள் விரைவாக சீரடைந்து வருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

தேசத்தின் பெருமையை தன் தனிப்பட்ட திறமையால் கட்டியெழுப்பி ஈடிணையற்ற தன் ஆளுமையால் முழுத் தேசத்தையும் ஆகர்ஷித்து வழிநடத்திய அந்தப் பெருமகளை திடீரென சில சுயநல வெறியர்கள் சுட்டு வீழ்த்திவிட்டதைக் கண்டதும் அதிர்ச்சிக்குள்ளான மக்கள் உணர்ச்சிமேலிட்டு வன்செயல்களில் ஈடுபட நேர்ந்தது துரதிர்ஷ்டமே. என்றுலும் மறைந்த தலைவியினுல் உருவாக்கப்பட்ட ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உடைத்தெறிய அவர்கள் முற்படுவார்கள் எனக்கருதுவது பேதமை.

''பாரதபூமி பழம்பெரும் பூமி - நீர் இதன் புதல்வர் இந்நினைவகற்ருதீர்'' என பாரதி பாடிய பண்பாட்டு வழியில் வந்த பாரத மக்கள், தம் தலைவர்களின் வழிகாட்டலுக்கு செவிசாய்த்து உணர்ச்சி தணிந்து ஒரு நிலைப்பட்டு வருகின்றனர்.

இதைவிட, இந்தியத் தலைவரின் வாரிசாக பதவியில் அமர்ந்துள்ள புதிய பிரதமர் ரஜீவ் காந்தியின் ஆரம்ப நடவடிக்கைகளே பாராட்டும்படியாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

அன்னையை இழந்த கையோடு முதிய தலைவர்களின் ஆலோசனையின் பேரில் பிரதம மந்திரியாக பதவி ஏற்றுக் கொண்ட அவர், பெற்றவளின் பிரேதம் வீட்டில்கிடக்கநாட்டில் உருவாகிவிட்டகலவரங்களை கட்டுப்படுத்துவதற்காக அந்த இடங்களுக்கே நேரில் சென்று அதிகாரிகளுக்குப் பணிப்புரைகள் விடுத்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியும் துரிதமாக செயல் பட்டமை, அன்னையின் மரபினை அவர் அடியொட்டி நிற்பதை எடுத்துக் காட்டியது.

நாட்டு மக்களுக்கு அவர் விடுத்த செய்தியில் ''ஒன்றுபட்ட இந்தியா நிலைத்துச் செழிக்க வேண்டும் என்பதற்காகவே இந்திரா காந்தி தன் உயிரைக் கொடுத்தார். சகோதரனுக்கு சகோதரன் பிரிவுபட்டு நிற்கும் விதத்தில் எது நடந்தாலும் தேச ஒற்றுமையைப் பாழ்படுத்திவிடும். அழிவுச் சக்திகள் தமது நோக்கங்களை அடைவதற்குத்தான்இந்தக் கலவரங்கள் உதவக்கூடும் என்று ஆணித்தரமாகஎடுத்தியம்பினுர்.

அதோடு நிற்கவில்லை. அடுத்துவந்த சொற்கள் அவர்தம்பொறுப்பை நன்கு உணர்ந்து கொண்டுள்ளார் என்பதை மட்டுமல்ல,தாம் இந்திராவின் புதல்வர் என்பதையும் நிலைநாட்டின.

''இனக்குரோத வெறியானது எம்மை அழித்துவிடும் இந்தியா எதற்காகப்பாடுபடுகின்றதோ அவைகளையெல்லாம் அழித்துவிடும். பிரதம மந்திரி என்றமுறையில் இதனை நான் அனுமதிக்கமுடியாது, அனுமதிக்கவும் மாட்டேன்''

நாற்பதே வயதான ஒரு இளம் தலைவனிடமிருந்து இவ்வாறுன உறுதி மிக்க சொற்கள் வெளிவந்திருப்பதானது மீண்டும் இந்தியா பத்திரமான கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இந்திராவுக்குப் பின்னர் இந்திய நாட்டில் வாழும் பலகோடிக்கணக்கான சிறுபான்மையினங்களின் எதிர்காலம் என்னவாகுமோவென அஞ்சிக்கொண்டிருந்தவர்களுக்கு ரஜீவ் காந்தியின் சொற்களும், செயல்களும் நம்பிக்கையும் மனநிறைவும் தரும்என்பதில் சந்தேகமில்லை.

நாட்டு மக்களின் நல்லெண்ணமும், முதிய தலைவர்களின் அனுபவமிக்க ஆலோசனைகளும், எதிர்காலச் சவால்களை அன்னையைப் போலவே துணிச்சலோடு எதிர்கொண்டு வெற்றிபெறஅவருக்குஉதவ வேண்டும்.

'ஆசியஜோதி' என பெருமையுடன் அழைக்கப்பட்ட மாபெரும் ஜனநாயகவாதி ஜவஹர்லால் நேருவின் புதல்வி இந்திராகாந்தியின்-இந்திய தேசத்து அன்னையின் புதல்வர் ரஜீவ் காந்தி தம் முன்ஞேரின் பாரம் பரியங்களை கட்டிக் காத்திடுவார். தம் அன்னையைப் போல்,தாத்தாவைப்போல் உலக அரங்கிலும் திகழ்வார் என்று எதிர்பார்ப்போம்.

# இன்று திருமூலர் குருபூசை
# திருமூலரும் திருமந்திரமும்

திருமூலர் அருளிய திருமந்திரநூல் பன்னிருதிருமுறைகளுள் பத்தாவது திருமுறையாகும்

பெரியபுராணத்திலுள்ள திருமூலர் வரலாறு சரித்திரக் கண் கொண்டு நோக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புதிராகவே இருக்கும். திருக்கயிலையில் இருந்துவந்த சிவயோகி ஒருவர் பசுக்களின் துயர்நீக்குவதற்காக இறந்த இடையனின் உடலில் புகுந்தார். அவ் இடையனின் பெயர் மூலன். யோகியார் மூலனின் உடலில் இருந்து சிவாகமம் பொருளைத் தமிழில் பாட வேண்டுமென இறைவன் பணித்தபடி திருமந்திரத்தை இயற்றினுர்எனக் கூறுவதோடு திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்தார் என்றும் சேக்கிழார் கூறுவர். யோக சித்திகளில் ஒன்றுன ''பரகாயப் பிரவேசம்'' செய்யும் வல்லமையால் சிவயோகியார் தம் உடலை விட்டு வேறு உடலில் புகுந்ததை ஒப்புக்கொள்ள முயல்பவரும், மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததை ஏற்கத் தயங்குவர். ஆனுல், புராணம் பாடும்போது தருக்கச் சிந்தனைகளுக்கும், வரலாற்று உண்மைகளுக்கும் விரோதமாகப் பாடாத சேக்கிழார் வாக்கைச் சந்தேகிப்பதும், மறுப்பதும் சிரமம்.

நீதி நூல்கள் விடயத்தில் திருக்குறள் போதிக்கும் உண்மையை மறுப்பது எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமம் பெரிய புராணம்கூறும் கருத்துக்களை மறுப்பதாகும். மந்திரியாயிருந்த காலத்தில் நாயன்மாரின் வரலாறுபற்றிய ஆய்வில் ஈடுபட்டதுமாத்திரமன்றி புராணம் இயற்றும்போது நடராசப்பெருமானின் பூரண அருட்துணையோடு செய்த பெரியபுராணக்கருத்து விளங்க முடியாத விடயங்களில் அவற்றை ஆய்வுக்குரியதாகக் கொள்வதன்றி மறுத்தற்குரியதாகக் கணித்தலாகாது.

பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் ஒன்றே சாஸ்திர நூலாகும்.

சாஸ்திர ரூபமாக விளங்கும் திருமுறையே திருமந்திரம் என்பதும் மட்டுமன்றிச் சித்தாந்த சாஸ்திரங்கள் பதினுன்கிற்கும் முற்பட்ட சித்தாந்த் நூலாகவும் திருமந்திரம் விளங்குகின்றது.

யுமாறே'' என்ற தொடரையே தனதும்; தான் தாபித்த சங்கத்தினதும் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இத் தொடரே திருமூலரின் தமிழ் பற்றை உணர்த்தவல்லதாகும்.

இறையிலக்கணம், கூடாவொழுக்கம், கற்புடைமகளிர், மெய்ஞானிகள், சிவனடியார், சிவநாம மகிமை, சற்குருவிலக்கணம், முதலிய பல விடயங்களைப்பற்றி மனதிற்கு இதமாகவும் அறிவிற்கு விருந்தாக உள்ள பாடல்களை சைவசமயியாயுள்ள தமிழன் ஒருவன்

**தி. பொன்னம்பலவாணர்**

சித்தர் பாடல்கள் போன்று குறிப்பாகவும் மறைபொருளாகவும் உள்ள பல பாடல்கள் சாதாரண தமிழ் அறிஞர்களால் விளங்கிக் கொள்ளமுடியாதவையாகும். இப்படியான பாடல்களைத் தவிர்த்து தெளிவான பொருளுடைய திருமந்திரப் பாடல்களைப் பார்த்தால் திருமூலரின் வாக்கு வன்மையும் சிந்தனைத் தெளிவும், நுணுக்கமும் நன்கு புலனுகும்.

உலகளாவிய ரீதியில் தமிழ் பரப்பமுயன்ற தனிநாயகம் அடிகளார் திருமந்திரப் பாடல் ஒன்றிலுள்ள ''என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ் செய் ஒருமுறைதானும் படிக்கவில்லை என்ருல் அவன் மிகவும் அநுதாபப்பட தக்கவன்.

அட்டாங்கயோகம், திருவம்பலச்சக்கரம் முதலியனவாக உள்ள திருமந்திரப் பாடல்கள் மந்திர-யந்திர ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கட்கு அரிய சுரங்கள்களாகும்.

தான் நிற்குமிடத்தின் கீழ் புதையல் இருக்க அதை எடுக்க முயலாது பிச்சை எடுப்பவன் போலவே திருமந்திரத்தைப் படிக்காது பல சந்தேகங்களைத் தீர்க்க வேறுவழிகளை நாடும் தமிழ் மக்களைக் கருதவேண்டும்.

## அஞ்சலி

(சாவகச்சேரி)

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் ஆத்மா சாந்திக்கென அஞ்சலிக் கூட்டம் கைதடியில் நடை பெற்றது. கைதடி தெற்கு மின்னெளி கழகத்தினரால் ஏற்பாடு செய்யபட்டிருந்த இக் கூட்டத்திற்கு கழகச் செயலாளர் திரு. பரமசாமி தலைமை வகித்தார்.

## இந்திராவுக்கு சிலை

(பண்டத்தரிப்பு)

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஞாபகார்த்தமாக பெரிய விளான் சந்தியில் அவரது சிலை ஒன்றை நிறுவுவதற்கு அப்பகுதி இளைஞர்கள் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

இவர்கள் கடந்த சனிக்கிழமை நடத்திய அஞ்சலி ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## சிறிமா—அனுரா
## ராஜீவுடன் ஒரு மணி நேரம் சந்திப்பு

(கொழும்பு)

பாரதப் பிரதம மந்திரி திருமதி .இந்திரா காந்தியின் அந்திமக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி. சிறிமா வோபண்டாரநாயக்காவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவும் நேற்றுக் காலை சுவிஸ் விமானம் மூலம் இலங்கை வந்து சேர்ந்தனர்.

திருமதி. சிறிமாவும் புதல்வர் அனுராவும் புதுடில்லியில் புதிய பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம்பேசிக் கொண்டிருந்தாகத் தெரிகிறது.

இரு நாடுகளிக்கிடையிலான உறவுகள் இலங்கைத் தமிழர் பிரச்னை ஆகியவை பற்றி அவர்கள் கலந்துரையாடியதாகத் தெரிகின்றது.

## அழவிட்டுச் சென்றதேனே!



அறிவிற்கு அமுதூட்டி
ஆளுகைக்கு அன்னமிட்டு
அன்பிற்கு நீரிட்டு
அவரவர் இதயங்களில்
புகுந்துவிட்டு
எம்மையெல்லாம்
அழவிட்டுச்
சென்றதேனே.

ஜோ. ராதிகா

## தாயே மறைந்தனையோ

தமிழ் மகனைத் தத்தெடுத்து வளர்த்த
தாயே மறைந்தனையோ!
தமிழினத்தின் விடிவுக்கு குரல்-கொடுத்த
தாயே மறைந்தனையோ!

பூ. லிங்கேஸ்வரன்

## அவன் வழி இங்கு யார் அறிவார்!

முன்னெருகால் அன்னியர் ஆட்சியில் வங்காள
தேசம் இரத்தாறு பாய்ந்தது!
சன்னங்கள் மாரிபோற் சொரிந்து ஏவினர்!
கோடி மக்கள் மாய்ந்தனர்!
கண்டு சகித்திலீர்! மனிதாபிமானம் வென்றது!
நும்படை நூருயிரம் செலுத்தினீர்!
அன்னியர் சரணடைந்தனர்! வங்காளம்
விடுவித்தீர்!
நயமேதும் கருதிலீர்! பெரியோய்!

நின்னிதயம் கள்ளம் கபடம் தெரியாதம்மா!
அதுவெள்ளை உடையில் திகழ்ந்தம்மா!
அன்னியம் மறவர் குறிக்கோள் அம்மா!
தூர்நசையால் மனிதரைப்பிரிப் பரம்மா!
நனிகுண்டுகள் தீர்த்துமைத் துளைத்தா ரம்மா!
நின்றுநாமம் ஏங்கிட மறைந்தனையே!
இனியெமை இறைவனே காத்திட வேண்டுமம்மா!
அவன்வழி இங்குயார் அறிவார்!

சி. பொன்னையா

## மனம் எரியுதம்மா!

வெள்ளைப் புரு மண்ணில் வீழ்ந்தம்மா
வேதனைக் கணை நெஞ்சில் பாய்ந்ததம்மா
ஏற்றிய தீபம் அணைந்ததம்மா-மனம்
மூட்டிய தீயென எரியுதம்மா

தீட்டிய திட்டங்கள் நின்றதம்மா
துயர் ஓட்டிய பூக்கரம் வீழ்ந்ததம்மா
நாம் போற்றிய பொன் ஒலி ஓய்ந்ததம்மா-உரம்
ஊட்டிய நெஞ்சமே உருகுதம்மா.

விஜய் சற்குணராஜா

# பஸ்பயணிகளுக்கு கிளிநொச்சி மாணவர்பேரவை உதவி

(கிளிநொச்சி)

இந்திரா மறைவினுல்யாழ்ப்பாணம் வரை பஸ்சேவை நடாத்தப்படாததையிட்டுப் பாதிப்படைந்த கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலிருந்து வந்த பயணிகளுக்கு கிளிநொச்சியில் தற்காலிக பராமரிப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாணவர் பேரவையினர் இவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தற்காலிக இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டு பயணத்தை தொடர முடியாத சுமார் 200 பயணிகள் அங்கு தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டது.

உணவு, மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டன. இந்திரா மறைவையடுத்து பஸ் சேவைகள் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரை நடைபெருததால் நூற்றுக் கணக்கான பயணிகள் கிளிநொச்சியில்மிகுந்தசிரமமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

# நல்லை ஆதீனத்தில் பூரணை நாள் நிகழ்ச்சி

[நல்லூர்]

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் வியாழக் கிழமை பூரணை தினமன்று காலை 9 மணி முதல் திருமுறை முற்ருேதல்தொடர்ந்து நடைபெறும் அன்றுஇரண்டாம் திருமுறை நிறைவெய்தி மூன்றும் திருமுறை ஆரம்பமாவதையிட்டு பகல் மாகேஸ்வரபூசையுடன் திருமுறை யோதல் முடிவுறும்.

# ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டு வளம் (தமிழ்)
5-35 ஹெக்கள் அன்ட் ஜெக்கிள் (கார்ட்டூர்ன் சித்திரம்)
6-00 விஞ்ஞான நிகழ்ச்சி (சிங்களம்)
6-20 சோவியத் தேசிய தின விசேட நிகழ்ச்சி
6-35 தேகாரோக்கிய நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 தகவல் நிகழ்ச்சி (சிங்களம்)
7-45 பொதுஅறிவு போட்டி (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 திரைப் படம் (சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத்தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரை படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சி முடிவு

# கட்சிப்பிரமுகர் இல்லம் பலத்த சோதனை

(யாழ்ப்பாணம்)

ஈழப்புரட்சி கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. பி.கே. பாலசுப்பிரமணியம் தங்கி இருந்த வீடு கடந்த சனிக்கிழமை ஆயுதப் படையினரால் பலத்த சோதனை இடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோண்டாவில் வ.பி.போ.வ சபைக்காரியாலயத்துக்கு அண்மையில் உள்ள வீட்டிலேயே ஆயுதப்படையினர் சோதனையிட்டதாகவும் சோதனை நடைபெற்றபோது அங்கு எவரும் இருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

வீட்டின் அறைக் கதவுகளை உடைத்த ஆயுதப்படையினர் அங்கிருந்த அலுமாரிகள், தட்டு-முட்டுக்கள் எங்கும் தடவிப் பார்த்தும் எதுவித தடயப் பொருட்களும் கண்டெடுக்கப்படவில்லைஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவீடு சேதமடைந்த நிலையில் இப்பொழுது காணப்படுகிறதாம். குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஆனைபிறவு தடைமுகாமில் அண்மையில் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

## விசேட பூஜை பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீமகாவிஷ்ணு நிலைய நிர்வாக அங்கத்தினர் கடந்த ஞாயிறன்று ஸ்ரீமகாவிஷ்ணு அ. த. க. பாடசாலையில் அதிபர் திரு வே.இராமர் தலைமையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவு தினத்தையொட்டி கண்ணீர் அஞ்சலியும், தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி ராமச்சந்திரன் பூரண நலம் வேண்டி விசேட பூஜையும் பிரார்த்தனையும் நடைபெற்றது.

## நிறைவேருத...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

பூரியிலுள்ள இந்து ஆலயமொன்றுக்குச் சென்று வழிபடவேண்டுமென்று நீண்டகாலமாக விரும்பினுரம்; அதுவும்நிறைவேறவில்லை.

## மட்டக்களப்பில்...

(1-ம்பக்கம் 3ம்கல தொடர்ச்சி)

டன் திருமதி ஜீவா அழகதுரையுமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர். இவர்களுடன் கைது செய்யப்பட்ட திருமதி சீதா ரவீந்திரன் என்ற தாதி இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

விடுதலை செய்யப்பட்டவர்களை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் வேலும் மயிலும், மட்டக்களப்பு வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் வி. ஜெகநாதனும் அழைத்துச் சென்றனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் டாக்டர் பிரேமச்சந்திரனையும், திருமதி அம்பிகா கமலநாதனையும் மட்டக்களப்பு பகுதியைவிட்டு செல்லக்கூடாதென்றும், அப்படிச் செல்வதாஞல் பொலிஸ் நிலையத்தில் அனுமதி பெறவேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட திருமதி சீதா ரவீந்திரன் என்ற தாதி, கடந்த திங்கட்கிழமை நோயினுல் பாதிக்கப்பட்டு. பதுளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இவர்களுடன் கைதுசெய்யப்பட்ட கவிஞர் காசி ஆனந்தனின் சகோதரியும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

## பிந்திய செய்தி

பதுளை ஆஸ்பத்திரியிலுள்ள தாதியும் விடுதலை செய்யப்படலாம் என்று கடைசியாகக் கிடைத்த தகவல் கூறுகிறது

## நியூயோர்க்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

வந்து சேர்ந்தார்.

பம்பாயிலிருந்து நேற்றுக் காலை எம். ஜி. ஆரின் விமானம் புறப்பட்டது. இந்த விமானம் நேற்றுப்பிற்பகல் 1-10க்கு லண்டன் வந்து சேர்ந்தது.

முதலமைச்சர் உற்சாகத்துடன் காணப்பட்டதாகவும், அவருடன் சென்றுள்ள டாக்டர்கள் அவர் உடல்நிலை குறித்து மகிழ்ச்சியாகவே இருப்பதாகவும் சென்னை ஏயர் இந்திய அலுவலகத்துக்குக் கிடைத்துள்ள தகவல் ஒன்று கூறுகிறது.

திரு. ராமச்சந்திரனுடன் பதினுன்கு டாக்டர்கள் கூடச் சென்றனர். இந்த டாக்டர்கள் அவர் மனைவி ஜானகி உட்பட 29 பேர் கூடச்சென்றுர்கள்.

## இந்திரா...

(1-ம் பக்க2ம்கலத்தொடர்ச்சி)

குழுத் தலைவர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் அஸ்தியின் ஒரு பகுதியை யாழ்ப்பாண மக்கள் அஞ்சலி செலுத்தி, கீரிமலையில் கரைக்க ரஜீவுடன் சத்வால் மூலமாகத் தொடர்புகொண்டிருந்தார்.

## உமாமகேஸ்...

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

தில் ஹர்த்தால் நடந்தபோது இலங்கை ராணுவத்தினர் இரண்டு இடங்களில் சுட்டதில், எட்டுத் தமிழர்கள் உயிர் இழந்ததாக தமிழ் ஈழ மக்கள் விடுதலை அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளாரென பி. ரி. ஐ.செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

புதுடில்லியில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் ராணுவத்தினர் தமிழ் பகுதிகளிலுள்ள இரு இடங்களில் சுட்டதாகவும், பல வீடுகளை தீக்கிரையாக்கியதாகவும் உமா மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறுர்.

## முல்லைத்தீவு...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

கூறப்பட்டது.

கிளிநொச்சியிலும் முகாம் ஒன்றைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் 4 பேரைச் சுட்டுக்கொன்றதாகவும், 3 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் பாதுகாப்புப் படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## வீடு தீக்கிரை...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

நேற்றுக்காலை ஆயுதப்படையினர் நடத்திய சோதனையைத் தொடர்ந்து இந்த வீடு தீக்கிரையானதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவத்தின்போது மற்ருெருவர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் தொடர்ச்சியாகக் கேட்டது. இதனையடுத்து அப்பகுதியில் நால்வர் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டனராம்.

நாச்சிமார் கோவிலுக்கு அப்பால் அவ்வீதியில் நேற்று மாலைவரை சனநடமாட்டம் காணப்படவில்லை மினிபஸ்கள் நாச்சிமார் கோவிலுக்கு எதிரிலுள்ள வீதியால் சென்றன. அப்பகுதி மக்கள் பதற்றமடைந்த நிலையில் காணப்பட்டனர். (க)

## சிங்கராயர்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

மன்றத்தில், நீதிபதிகள் எல். ஏச். டி. அல்விஸ், டி. அத்துக்கொரளை, ஜே. அபயரத்தின ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இம்மாதம் 20ம் திகதிக்கு அட்டர்னிஜெனரலுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## உரும்பராயில்...

(1ம் பக்க 4ம் கல தொடர்ச்சி)

மூவர் ஒரே மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, இத்துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இருவர் ஸ்தலத்திலேயே மாண்டனர். சோதிநாதன் [25வயது], அப்பன் [25 வயது] ஆகிய இருவருமே மரணமானவர்கள் மோட்டார்சைக்கிளில் ஆகப்பின்னுல் இருந்த பதினெட்டு வயதான சிறீரஞ்சன் கோப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அங்கிருந்து அனுப்பப்பட்டார்.

பலியுண்ட இரு இளைஞர்களின் சடலங்களும் நேற்றிரவு 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு, பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளன.

## சிறையில்...

(8ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

பட்டது.

கடற்ருெழில் பகுதியிடமிருந்து தாம் வழக்கைப் பொறுப்பெடுத்துள்ளதாகவும், இவ்வழக்கை 3, 4 வாரத்தில் எடுக்கலாம் என்றும் அரச தரப்பு சட்டத்தரணி கூறினுர்

இதனை ஆட்சேபித்தே திரு. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு வாதிட்டார். ''கைதுசெய்த பின்னர் சாட்சியத்தைத்தேடுவது சரியல்ல'' என்றும் கூறினுர்.

இம்மாதம் 16ந் திகதிக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

## பட்ஜட்..

(8ம் பக்கம் 5ம்கல தொடர்ச்சி)

றத்தில் நிதிஒதுக்கீட்டுச்சட்ட மூலத்தைச் சமர்ப்பித்தார்.

இந்த மதிப்பீட்டின்படி அடுத்த ஆண்டில் அரசின்செலவீனம் 4,466 கோடி ரூபாவுக்கு அதிகமானதாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்தொகை 2 290 கோடி ரூபாவாக இருக்கும்.


## கடந்த மாத நெஸ்பிறே வெற்றியாளர்கள் தலா ரூ.5000/= பரிசு

கயானி டி அல்விஸ், 47/16, நெல்சன் ஒழுங்கை, கொழும்பு 3.

வீ. சாந்தி மாலனி, 1/67, பன்சல வீதி, கனேமுல்ல.

தயா பத்திரன, மக்கள் வங்கி, வெலிகம.

ஏ. விதாரண, 49/1, கேணல் மாவத்தை, நிக்கப்பே, தெஹிவளை.

டி. ஜீ. பெர்னுண்டோ, 1/35, ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க வீதி, 4-ம் குரண, நீர்கொழும்பு.

ரெஷானி கூரே, 14, டோஸன் வீதி, கொழும்பு 5.

எச். மாலனி, 45/45, சங்கைக்குரிய சரணபால மாவத்தை, பொரளை.

ஆர். சரத்சந்திரன், 14, சென். மைக்கேல்ஸ் வீதி, மட்டக்களப்பு.

ஷீலா வெலிச்கல 387, ஒவிற்றிகம, மீகொட.

ஈ. குகதீபன், 42, சீ வியூ ரோட், திருகோணமலை.

காரிதா மனம்பேரி, 40, ஸ்ரீ ரத்னபால மாவத்தை, நூப்பே மாத்தறை.

ரே. அஷோக்க ஜயசூரிய 46, ரக்மல்கடுவ வீதி, சிங்கபிற்றிய, கம்பளை.

பரிசு பெறுவோரின் பெயர்கள் வாராவாரம் இந்நிகழ்ச்சியில் அறிவிக்கப்படும்.




## நீங்களும் வெற்றி பெறலாம்

★ நெஸ்பிறே பக்கெட்டின் பின்புறம் பாருங்கள்.
★ நெஸ்பிறே அருந்துவோரின் நாட்டைத் தெரிவுசெய்யுங்கள்
★ விடைக்கூண்டையும் கூப்பனையும் நிரப்புங்கள்
★ த. பெ. இல. 1119, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புங்கள்
★ நீங்கள் மீண்டும் மீண்டும் பரிசுபெறலாம்.




விலை ரூபா 27/90.

நெஸ்பிறே

வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

Grant K & E 5608

# மண்டைதீவில் மாபெரும் மௌன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மண்டை தீவிலும் மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

மண்டைதீவு தெற்கு கந்தசாமி கோவிலிலிருந்து ஆரம்பமான இந்த மௌன ஊர்வலம் கிராமத்தின் முக்கிய பகுதிகளினூல் சென்று மண்டைதீவு கிழக்குப் பகுதியில் நடைபெற்ற அஞ்சலி கூட்டத்துடன் முடிவடைந்தது.

ஆண்கள், பெண்கள் உட்பட 2000 பேர் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொண்டனர். அன்னை இந்திராவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் சுலோக அட்டைகளும், கறுப்பு கொடிகளும் ஊர்வலத்தில் இடம் பெற்றன.

திரு. கு. க. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தரு த. சிவபரஞ்சோதி, திரு. சோ. ஸ்ரீகாந்தன் திரு. மக. சிவகுலசிங்கம், திரு ரி. அருள்தாஸ், திரு. இராஜநாயகம் திரு. ராமச்சந்திரன் ஆசிரியர்சிவப்பிரகாசம்உட்பட பலர் அஞ்சலி உரைவழங்கினர்.

## ஆசிரியர் சங்கம் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

''மிகடபெரிய சனநாயக நாடொன்றின் பிரதமரும், சனநாயகத்தினை மதிக்கும் நாட்டு மக்களால் பெரிதும் மதிக்கப்படுபவருமான இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி படுகொலை ''செய்யப்பட்டதைக் கேள்வியுற்று இலங்கைத் தமிழர்கள் அதிர்ச்சியும், அளவில்லாத ஆழ்ந்த கவலையும், துயரமும் அடைந்துள்ளார்கள்'' என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு.த. அருணகிரிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த ஒரு அறிக்கையில்; ''அணிசேரா நாடுகளின் தலைவியாக ஒடுக்கப்பட்ட இனத்தின் ஒளிவிளக்காக, சனநாயகத்தின் வழிகாட்டியாக வாழ்ந்த அன்னை இந்திரா அவர்களது அகாலமரணம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இலங்கை வாழ்தமிழர்கள் தங்கள் கலங்கரை விளக்காக நம்பிய தலைவி இந்திரா அம்மையார் மரணமடைந்ததினால் ஆழ்ந்த கவலையில்மூழ்கி இருக்கும் இவ் வேளையில் இலங்கைத்தமிழர்ஆசிரியர் சங்கமும் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துச் சோகத்தில் பங்கு கொள்கின்றது''. என்று தெரிவித்துள்ளார்.

# செய்திச்சிதறல்

## பிரார்த்தனை

(சுண்டிக்குளி)

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் குணமடைய வேண்டி நவாலி தெற்கு அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் விசேடபூசைகளும் பொங்கள்களும் இடம் பெற்றன.

இவ் வைபவத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

## ஓய்வு பெற்றார்

(சுண்டுக்குளி)

யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. பொ. நடராசா தனது நாற்பது வருட சேவையை முடித்துக் கொண்டு ஓய்வு பெற்றுள்ளார். இவர் யாழ். உணவுக்கட்டுப் பாட்டதிகாரியாக பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றியுள்ளார்.

## குடமுழுக்கு விழா

(புலோலி)

புலோலிகிழக்கு பல்லப்பை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய குடமுழுக்கு விழா இம் மாதம் 8ம் திகதி நடைபெறவுள்ளது.

சிவாகம கிரியாகிரம ஜோதி சிவத்திரு வ. வே. நவரத்தினக்குருக்கள் தலைமையில் குடமுழுக்கு விழா நடைபெறுகின்றது.

மூலஸ்தானம், அர்த்தமண்டபம் மகாமண்டபம். துவிதளவிமானம் ஆகியவையும் விநாயகர், காளிதேவியாகிய பரிவாரமூர்த்திகளுக்கு ஆலய விமானம் ஆகியனவும் சுமார் ஒன்றரை லட்சம்ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—22(07-11-1984)
வாரம்—புதன்
திதி—சதுர்த்சி இரவு 10-16 வரை
நக்ஷத்திரம் — அச்சுவினி பின்இரவு 5 36வரை

மேடம்:- அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும் அபாய கரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

இடபம்:- பேச்சு வன்மையினூல் பெரும் புகழ் கிடைக்கும்பெரிய இடத்துச்சாவகசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும் வரவிலும்உயர்வு காணும்.

மிதுனம்:- தூக்கம் விழிசளை தழுவ மறுக்கும் கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

கடகம்:- இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள் வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

சிங்கம்:- நேர்முகப் பரீட்சைக்கு உகந்த நாள் புத்திர வழிக்கும் நன்மையுண்டு தெய்வத்தின் அருள் தாராளமாக கிடைக்கும்.

கன்னி:- ஆயுத பயத்திற்கும் அவசரக் கவலைக்கும் இடமுண்டு கைகலப்புகளை தவிர்த்துக் கொள்ளவும் எதிரிகள் விடயத்தில் அதிக விழிப்புடனிருக்கவும்.

துலாம்:- குடும்ப வழியால் மனதிற்கு நிம்மதி பிறக்கும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு சிறப்பான தினம்.

விருச்சிகம்;- நண்பர்களின் நச்சரிப்பு மனக்குமைச்சலை ஏற்படுத்தும் கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு இலக்காவீர்கள்.

தனுசு:- பிதா வழியில் இருந்து நன்மையான செய்திக்கு இடமுண்டு தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

மகரம்:- தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாக கிடைக்கும் நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

கும்டம்;- பொருள் வரவு உபசாரம் பொழுது போக்கு இவைகளுடன் உற்சாக மூட்டும் செய்தியும் கிடைக்கும்.

மீனம்:- சிந்தனையின் தாக்குதலால் உடல் நிலை பாதிக்கும் மனதில் அமைதி குன்றும் திடீர் முடிவுகளை தவிர்த்துக் கொள்ளவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சுகாதாரத்தை பேணத்திட்டம்

[பச்சிலைப்பள்ளி]

பருத்தித்துறை கிழக்கு, பூநகரி ஆகிய பகுதிகளில் சுகாதாரத்தினைப் பேணுவதற்கு புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வைத்திய அத்தியட்சகர் திரு கே. மாணிக்கம் யாழ் மாவட்டத்தின் பின்தங்கிய இப் பகுதிகளின்சுகாதாரத்தினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இப் பகுதிகளில் முதற்கட்டமாக வைத்தியசாலை- மக்கள் இணைப்புக் குழுக்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

## ஈழத்தமிழருக்கு பேரதிர்ச்சி!

(யாழ்ப்பாணம்)

''தத்தளித்த ஈழத்தமிழர்களுக்கு தக்க நேரத்தில் கைகொடுத்த பாரதத் தலைவி திருமதி. இந்திரா காந்தி படுகொலை செய்யப் பட்டசெய்தி ஈழத்தமிழர்களை பேரதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டது தாங்க முடியாத இன்னல்கள் மத்தியில் வாழும் மக்களுக்கு வழி பிறக்க ஒளியூட்டி வந்த அன்னை இந்திராவின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்''

இவ்வாறு அரச கூட்டுத்தாபன ஊழியர் சங்க பொதுச் செயலாளரும் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு செயலாளருமான ஐ. தி. சம்பந்தன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இலவச வைத்தியசேவை

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலுள்ள தொழுநோயாளர்களின் நலன்கருதி இலவச வைத்திய பரிசோதனையையும், வைத்திய சிகிச்சையையும் நடாத்தியது. காட்டுப்புலம் சிறுவர் பாடசாலை மண்டபத்தில் வைத்து நடாத்தப்பட்ட இந்த வைத்திய பரிசோதனையில் சுமார் 300 பேருக்கு வைத்திய பரிசோதனை நடாத்தப்பட்டு பூச்சி தடுப்பு மருந்துகள், சத்துமிக்க விற்றமின் மாத்திரைகள் ஆகியன வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் ரி. பகீரதன், டாக்டர் எமில் அத்தனுசியார், டாக்டர் எஸ். அம்பலவாணர் ஆகியோர் இவ் வைத்திய பரிசோதனையையும் சிகிச்சையையும் நடாத்தினர்கள்.


விவசாயிகளே! BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள் ''பாயர்'' உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய ''சேர்கோப்பூர்''

450 மி. லீ. — 57 ரூபா. 3.25 லீற்றர் — 375 ரூபா மாத்திரமே.

நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) ''ஹெடோனல் எம். 60%''
450 மி. லீ. — 60/- ரூபா. 2 லீற்றர் — 245/- ரூபா.

(2) ''ஹெடோனல் எம். 40%''
450 மி லீ. — 38/- ரூபா

(3) ''ஹெடோனல் D. 55%''
450 மி லீ. — ரூபா 57-50

ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ். 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவுனியா.
கே. அக்பார், மன்னார்.



UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ. 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்.- 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
நிச்சயதாம்பூலம்
தினசரி 3 காட்சிகள்

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30 4-45
Richard Pryor,
Jackie Gleason in
The Toy
Action - Comedy

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10.30, 2. 30, 6.30
சிவாஜி - மஞ்சுளா
அன்பே ஆருயிரே
From 8-11-84
Daily 10-30, 2-30, 4-30
HERBIE GOES
TO BANANA
(Color)
A Full Lenth of
Commedy Film
(முழுநீள சிரிப்புப் படம்)

ரீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
Lee Van Cleef...
Ernest Bognine.
ESCAPE from
NEWYORK
பிரமாண்டமான சிறைக் கூடங்களில் — திகிலும் — பரபரப்பூட்டும் இரவுளில் கைதிகள் தப்பிச்செல்லும் சாகசங்கள் மெய் சிலிர்க்கவைக்கின்றன.

லிடோ சினிமா
Daily 4 Shows
CONAN THE
BARBARION

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15 4 45
MID NIGHT EXPRESS
[கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்]

மனோகரா (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15, 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adults Only)
புரூஸ்லியின் திகிலூட்டும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம். இதுவே யாழ். நகரில்கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
9-11-84 முதல்
பூவிலங்கு

வின்ஸர் (யாழ்)
10.30, 2.00, 4 30, 6.45
The Body
(புத்தம் புதிய பிரதி)
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்
பாலியல் கல்வியை வாலிபர் முதல் வயது வந்தோர் வரை படித்துணர வேண்டிய அவசியமான திரை ஓவியம். இதுவே கடைசிமுறையாக குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் காண்பிக்கப்படுகிறது.

# நெல்லியடியில் பலியானார்!

[யாழ்ப்பாணம்]

நெல்லியடியில் குண்டு வெடிப்புக்குப் பலியானவர் நோபல் என்று அடையாளம் காணப்பட்டார்.

இம்மாதம் 2-ம் திகதி குண்டு வெடிப்புக்குப் பலியாகிய இவரின் சடலம், அடையாளம் காண்பதற்கு யாழ். ஆஸ்பத்திரி சவக்காலையில் வைக்கப் பட்டிருந்தது

நேற்று முன்தினம் பிரேதபரிசோதனை நடைபெற்றது. அச்சமயம் சடலம் அவரது சகோதரியால் அடையாளம் காணப்பட்டது. சடலம் அரச செலவில் அடக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. (க)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, இல: 43/1, கொழும்புத் துறைவீதியைச் சேர்ந்தமரண சாதனமின்றி மரணித்த குருசுமுத்து அந்தோனிப் பிள்ளையின் மரணச் சொத்து சம்பந்தப்பட்ட விடயத்தில்
— மரணித்தவர்

குருசுமுத்து அந்தோனிப் பிள்ளை கைம்பெண் கிறேஸ் பிறிம்றோஸ் இராஜதேவி (நல்லையா) இல:43/1, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், — மனுதார்

இல: தத்துவம் / 3761

எதிர்

1. குருசுமுத்து கைம்பெண் அன்னம்மா,
2. ஆர். வி. சிறில்,
3. பெண் ஸ்ரெல்லா,
4. எம். ஆர் வீனஸ்,
5. குருசுமுத்து இராஜேந்திரம்,
6. குருசுமுத்து மகள் புஸ்பம்
7. முத்துக்குமாரு கனகலிங்கம்,
8. பெண் கேற்றுட்,
9. குருசுமுத்து மகள் ஜசிந்தா,
10. குருசுமுத்து பேனுட், நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை,

— எதிர்வாதிகள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் ஆஸ்தியை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கமுடைய வழக்கைத் தாக்கல் செய்து அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறியத் தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறுதித் தீர்வையை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணமிருப்பின் இந் நீதிமன்றத்தில் 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி காலை 9-00 மணிக்கு இம் மன்றில் தோன்றி காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்
யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்


வரைவு
எல். பி. தம்பிராஜா,
மனுதாரின் சட்டத்தரணி

587

ஹரன் (யாழ்.நகர்)
10-30, 2-30,
4-30, 6-30
குறிப்பிட்டசில
தினங்கள் மட்டும்
BLOOD OF THE
DRAGON
(பயங்கர சண்டைகள்
நிறைந்த படம்)

611

## நினைவு அஞ்சலி



சதாசிவம் சண்முகம்

மலர்வு: 12-4-1920
உதிர்வு: 22-10-1980

எங்கள் அன்புத் தந்தையே, நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆனாலும் எங்கள் உள்ளங்களில் என்றும் உங்கள் நினைவு அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கும்,

மனைவி, மக்கள்,
மருமக்கள்.
சகோதரங்கள்
209/2. நாவலர் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். 602

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

வவுனியா ஓமந்தை கோவில் குஞ்சுக் குளத்தைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணித்த ஞானசேகரம் அமிர்தலிங்கத்தின் மரணச்சொத்து சம்பந்தப்பட்ட விடயத்தில்,
மரணித்தவர்

வவுனியா ஓமந்தை கோயில் குஞ்சுக் குளம் வேலுப்பிள்ளை ஞானசேகரம்பிள்ளை மறுநாமம் ஞானசேகரம்

எதிர்மனுதார்

இல தத்துவம்/526

வவுனியா ஓமந்தை கோயில் குஞ்சுக்குளம் வேலுப்பிள்ளை ஞானசேகரம்பிள்ளை மறுநாமம் ஞானசேகரம் பெண் மனோன்மணி


எதிர்வாதி

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ந் திகதி

மேற்படி இலக்க தத்துவ வழக்கு இந்நீதிமன்றில் மேற்படி கூறிய மரணசாதனமின்றி மரணித்தவரின் ஆஸ்திகளை நிர்வகிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டு அதற்கேற்ப பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய நபர் யாரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி குறித்த பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் இருப்பின் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்:
எஸ். வி. கணேசன்,
பதிவாளர்
வவுனியா மாவட்ட
நீதிமன்றம்.



கிளிநொச்சி — பரந்தன் றோட்டறிக்கழக ஆளுநர் திரு. கெமுனுகுணதிலகா அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தபோது கிளிநொச்சி — பரந்தன் றோட்டறிக்கழகம் அவருக்கு வரவேற்பு அளித்தது. றோட்டறி அலுவலகத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் கிளிநொச்சி — பரந்தன் கழகத் தலைவர் திரு. ப. வை. ஜெயபாலன் அவரை வரவேற்று கழகச் செயல்திட்டங்களை விளக்கிக்கொண்டிருப்பதையும் நடுவே திரு கெமுனு குணதிலகா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். இடதுகோடியில் இருப்பவர் மாவட்டச் செயலாளர் திரு. யோகேந்திரநாதன்.

# "தமிழ்மக்கள் நிம்மதியாக வாழ இறைவன் துணைசெய்ய வேண்டும்"

[மானிப்பாய்]

"எமது மக்கள் பயமின்றியும் நிம்மதியகாவும் வாழ இறைவன்தான்துணை செய்ய வேண்டும். நிரபராதியான அப்பாவி மக்கள் வீணகப்பலியாவதையும், அவர்களது சொத்துக்கள் வீணகக் கொள்ளைபோவதையும்நிறுத்த அரசாங்கம் உடனடியாக ஆவண செய்யவேண்டும்."

இவ்வாறு பல்கலைமணி தம்பிராசா சுதுமலை நாமகள் சனசமூக நிலையம், கலாமன்றம் ஆகியவற்றின் புனரமைப்புக் கட்டடத் திறப்புவிழா வைபவத்துக்குத் தலைமைவகித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அமரத்துவம் அடைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கு இவ் வைபவத்தின் போது அஞ்சலி செலுத்தப்பட்டது அனுதாபச்செய்தியொன்று புதிய பிரதமருக்கு அனுப்பிவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. தமிழக முதல்வர் திரு எம். ஜி ராமச்சந்திரன் உடல்நலம் பெற வேண்டுமெனவும் இக் கூட்டத்தில் பிரார்த்தனை செய்யப்பட்டது. திருவாளர்கள் அ. கனகசிங்கம், க. மயில்வாகனம், திரு சோ. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் தலைவர்:- தம்பிராசா, செயலாளர்:- பூ. சிவபாதசுந்தரம், பொருளாளர்:- அ கனகசிங்கம், உபதலைவர்:- க. மயில்வாகனம், உபசெயலாளர்;- க. சத்தியசீலன் ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கண்ணபுரம் மக்கள் அன்னை இந்திரா காந்திக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் முகமாக அவரது இறுதிக் கிரியைகள் இடம் பெற்ற தினத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில் உண்ணாவிரதத்தை ஆழ்ந்த கவலையுடன் மேற்கொண்டு அன்னை இந்திரா காந்திக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்கள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 03 | 11 | 1923



மறைவு; 08 | 10 | 1984

திரு. மூத்ததம்பி நவரத்தினம்
(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்விற்கோர் வழிகாட்டியாயும் எங்களை வாழவைத்த குடும்ப விளக்கே! வாழ்வார் உள்ளங்களில் ஒளி விளக்காகி எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலமாட்டா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்,

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்.
கண்ணகி அம்மன் கோவிலடி,
சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்.

(597)

## கிளிநொச்சி இளைஞர் விவகாரம்—

# 'ஓடியதால் சுட்டோம்!' ராணுவம் சொல்கிறது!!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள மின்கம்பத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கட்டப்பட்டிருந்த கந்தசாமி சுபேந்திரராஜா அல்லது நாகேந்திரம் என்ற இளைஞரின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை அவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதிரடிப்படை உதவி பொலிஸ் அதிபர் ராஜவிஜயக்கோன் அவசரகாலச் சட்ட விதிகளின்கீழ் விசாரணை நடத்தினர்.

இதுதொடர்பாக இராணுவ தரப்பில் பொலிசில் தெரிவிக்கப்பட்டதாவது:

''கடந்த 5-11-84ல் ஆனையிறவு இராணுவ முகாம் லெப்டினன்ட் விஜயசிங்காவிற்கு கிடைத்த பிரத்தியேக தகவல்காரர் கொடுத்த தகவலையடுத்து, கிளிநொச்சி கந்தன் குளத்திலுள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோது, பிரஸ்தாபநபர் தப்பியோடியதாகவும், அப்பொழுது தாங்கள் சுட்டதாகவும் இராணுவதரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

''இந்த இளைஞரை ஓட வேண்டாம், ஓடவேண்டாம் என்று எச்சரித்தபோதும், இவர்எச்சரிக்கையையும் மீறித் தப்பியோடியபோதே சுடப்பட்டதாகவும் இராணுவதரப்பில் கூறப்பட்டதாகத் தெரியவருகிறது.

# கடலில் பீரங்கி வேட்டுகள்;

## ஆகாயத்தில் விமான இரைச்சல்!

(பண்டத்தரிப்பு)

மாதகல் பிரதேசத்தில் கடந்த ஒருமாதகாலமாக இரவில் பலத்த குண்டுச் சத்தங்களும், விமானங்களின் இரைச்சல்களும் மக்களை இடையூறு செய்துவருகின்றன என்று கூறபடுகிது.

இரவில் மாலை 7 மணிக்குப் பின்னர் கடலில் பீரங்கிகள் சுட ஆரம்பித்துவிடுமாம். சிலவேளைகளில் பகல் நேரங்களிலும் இச்சத்தங்கள் கேட்கின்றனவாம்.

மாலையில் இந்தக்கடல் பீரங்கி முழக்கத்துடன் ஆகாயத்தில் இவ்விமான இரைச்சல்களும் தொடங்கிவிடுகிறதாம். குடிமனைப்பகுதிகளில் மிகத் தாழப்பறந்து விமானங்கள் இரைச்சலிடுகின்றனவாம். இதனால் சிறுவர்கள், பெண்கள் உட்பட மக்கள் பெரிதும் கிலிகொள்கின்றனராம்.

கடலிலும், ஆகாயத்திலும் இடைவிடாது கேட்கும் இச்சத்தங்கள் இரவு 10 மணிக்குப்பின்னரே அடங்குகின்றனவாம்.

கடல் பீரங்கி வேட்டுக்கள் இரவு வேளைகளில் வாணவேடிக்கைபோன்று தீப்பிழம்புகளைச் சிதறி ஆகாயத்தில் வெடிக்குமாம். (கி)

## கிளிநொச்சியில் வாகனங்கள் கடத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இருவாகனங்களை இனந்தெரியாத இளைஞர்கள் ஆயுதமுனையில் கடத்திச்சென்றுள்ளனர்.

கிளிநொச்சி வன. பரிபாலன இலாகாவில் வைத்து முல்லைத்தீவு கமநலச்சேவை நிலையத்திற்குச் சொந்தமான 'ஜீப்' வண்டி இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

### ட்ராக்ரர் கடத்தல்

கிளிநொச்சி ம் வாய்க்காலிலுள்ள பொன்னையா குமரேசன் என்பவரின் வீட்டில் வைத்து, அவருடைய சகோதரருடைய ட்ராக்ரர் ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்றினால் கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

இக்கடத்தல்கள் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### க. சின்னத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

நீர்வேலி தெற்கு இளைப்பாறிய ஆசிரியர் க. சின்னத்துரை காலமாகிவிட்டார் இவர் செல்லத்தின் அன்புக் கணவரும் சி. தயாநாதன் (தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), சி தயாராணி (அக்கராயன் மகாவித்தியாலயம்), சி. தயாபரன் (தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்), சி. தயாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-11-84 புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

608

## சென்னையில் இந்திரா அஸ்தி

[சென்னை]

இந்திராவின் அஸ்திக்கு நேற்றுமாலை சென்னையில் தமிழ்நாடு மக்கள் அஞ்சலி செலுத்தினர்கள். நேற்று ராஜாஜி மண்டபத்தில் மலர் மேடையில் அஸ்தி கலசம் நிதி அமைச்சர் நெடுஞ்செழியனால் வைக்கப்பட்டது. கலசத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்கள். கலசம் முன்னதாகநேற்று மாலை 4 மணிக்கு சென்னை சென்றல் ரயில் நிலையம்வந்து சேர்ந்தது.

# 'சிறையில் வைத்துக்காலம் தாழ்த்துவது சரியல்ல!'

## தமிழக மீனவர் வழக்கில் வாதம்

[யாழ்ப்பாணம்]

''இன்னொருநாட்டுப்பிரஜைகளை கைதுசெய்து சிறையில் வைத்துக்காலம் தாழ்த்துவது சரியானதல்ல, நமது நாட்டுப் பிரஜைகள் இந்தியாவில் கைதுசெய்யப்படும் பட்சத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்குள் வழக்கை விசாரித்து விடுவித்துவிடுவார்கள்'' என்று இந்திய ஸ்தானிகராலய சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான ஆர். பாலசுப்பிரமணியம் அனுராதபுரம் நீதிமன்றத்தில் நேற்று வாதிட்டார்.

இலங்கைக்கடல் பிராந்தியத்தில் பிரவேசித்ததாகக் குற்றஞ்சாட்டி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர் காப்டன்கள் தொடர்பான வழக்கு நேற்று அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் எடுக்கப்

(5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### சிங்கராசா சிவசுப்பிரமணியசிங்கம்

நல்லூர், 122, செம்மணி வீதியைச் சேர்ந்த, யாழ். விற்பனை இலாகா ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் சிங்கராசா சிவசுப்பிரமணியசிங்கம் 6-11-84ல் காலமாகிவிட்டார். இவர் ராசமலரின் அன்புக்கணவரும், திருமதி யோகேஸ்வரி (ஆசிரியை) ஸ்ரீஸ்கந்தா F. P. L. (வவனியா), ஸ்ரீநாகபூஷணி (யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி, ஸ்ரீ ஞானயோகன், (யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தகப்பனாரும், திரு. M. யோகநாதனின் மாமனாரும், சமரசிங்கம், மாணிக்கவாசகர் அவர்களின் சகோதரரும், திரு C. அரியராசா (இளைப்பாறிய தபாலதிபர்), திருமதி தங்கரத்தினம் ஆகியோரின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் அன்னார்ன் இல்லத்தில் நடைபெற்று, செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

620

## விஜேசிறி தம்பதிகள் சத்தியப்பிரமாணம்

[கொழும்பு]

மின்னேரியா குண்டசாலை, ஹரிபஸ்துவ பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். பி வஜயகோன், விஜயசிறி திருமதி விஜயசிறி ஆகியோர் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்கள்.

## ஜனாதிபதி தேர்தல்

# அமெரிக்க மக்கள் நேற்று வாக்களித்தனர்!

[வாஷிங்டன்]

அமெரிக்க மக்கள் தமது புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க நேற்று வாக்களித்தார்கள். இதற்கு முன்னர் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்புகள் றீகன் அமோக வெற்றியீட்டி மேலும் நான்கு வருடத்திற்கு வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பதவி வகிப்பார் என்று தெரிவிக்கின்றன ஜனநாயகக் கட்சி வேட்பாளர் மொண்டேல் 11 சத வீதத்திற்கும் 25 சத வீதத்துக்குமிடையில் பின்னணியில் நிற்கிறாரென்று அவைதெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் சரித்திரத்திலேயே வயதுமுதிர்ந்த ஜனாதிபதி றீகன் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு வயது 73.

1977ம் ஆண்டு தொடக்கம் 1981ம் ஆண்டு வரைக்கும் ஜிம்மி கார்ட்டரின் உப ஜனாதிபதியாகக் கடமையாற்றிய 56 வயதான மொண்டேல் அபிப்பிராய வாக்கெடுப்புகள் தவறானவை என்றும், றீகனை எதிர்க்கும் பெண்கள், கறுப்பு இனத்தவர்கள், அணு ஆயுத எதிர்ப்பாளர்கள் அளிக்கும் வாக்குகளைக்கொண்டு தாம் வெற்றியீட்டுவேன் என்றும் கூறியுள்ளார்.

## கடத்தப்பட்ட சவூதி விமானம்

(லண்டன்)

பயணிகள், விமானச்சிப்பந்திகள் உட்பட 130 பேருடன் லண்டனிலருந்து புறப்பட்ட சவூதி விமானமொன்று எட்டு மணி நேரத்தின்பின் ஈரானுக்குக் கடத்திச் செல்லப்பட்டது.

சவூதி அரேபியாவின் தலைநகரான றியாத்துக்குச்சென்றுகொண்டிருந்தபோதே இந்த விமானம் திசைதிருப்பப்பட்டது.

திசை திருப்பப்பட்ட சவூதி விமானத்தில் இருந்த 130 பேரும் நேற்று தெஹ்ரானில் விடுவிக்கப்பட்டார்கள் என்றும், அந்த விமானத்தைத் திசை திருப்பியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பட்ஜட்

(இ. கந்தசாமி)

நிதி அமைச்சர் திரு. றோனி டி மெல் நேற்றுப் பாராளுமன்

[5ம் பக்கம் 5ம கலம் பார்க்க]

## மரண அறிவித்தல்

### சுருவில்

### திருமதி கண்ணும்பா தம்பியப்பா

திருமதி கண்ணும்பா தம்பியப்பா காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா அவர்களின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம் (நிர்வாக இயக்குநர் நோர்தண் இன்டஸ்ரீஸ் யாழ்ப்பாணம்), மாணிக்கவாசகர் (கணக்காளர் லண்டன்), சபாநாதன் (உரிமையாளர் தம்பியப்பா அன் சன்ஸ் கஸ்தூரியார் வீதி), சிவநாதன் (றப்பர் ஆராய்ச்சியாளர்), உலகநாதன் (உரிமையாளர் பிறிலியன்ற் நகைமாளிகை கஸ்தூரியார் வீதி), நாகேஸ்வரி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசலட்சுமி, சாவித்திரி (விரிவுரையாளர் லண்டன்), கலைமகள், வசந்தி, ரஞ்சினிதேவி, கலாநிதி தேவேந்திரன் (பல்கலைக் கழகம் சிங்கப்பூர் ஆகியோரின் அன்புமாமியாரும், சுபோதினி, சுபேந்திரன் (இந்தியா), விநோதினி, நந்தினி, காயத்திரி (லண்டன்), தயாளினி, சிவசங்கர், நிரஞ்சினி, தஷ்சிமி, சுஜன், சுரப்பிரியன், தரணி, செங்கோடன் ஆகியோரது அன்புப்பாட்டியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 7-11-84 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் ஊர்சாவற்றுறை சுருவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

605

## மாணவர்கள் பிரச்னை

[யாழ்ப்பாணம்]

மாணவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் தொடர்பாக, சுமார் 30 மாணவ, மாணவிகளை கொண்ட குழுவினர் நேற்று பிற்பகல், யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்து, பிரச்னைகளை எடுத்துக் கூறினார்கள்.

இளவாலை, வசாவிளான் பாடசாலைகளை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றி மாணவ பிரதிநிதிகள் எடுத்துக் கூறினார்கள். (க)

## மரண அறிவித்தல்

### ஐ. அமிர்தானந்தம்

(முன்னாள் ரயில்வே பகுதி உத்தியோகத்தர்)

காலஞ்சென்ற திரு. திருமதி V. C. M. ஐயாத்துரை அவர்களின் புதல்வனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும். பத்மாசனி (U. K, சத்தியபாமா (Attorney at law) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற பாஸ்கரன், கிருபாகரன் (ஆரம்ப நீதிமன்ற நீதிபதி வேலணை), ராஜேந்திர சிவநாதன் ஆகியோரின் சகோதரரும், ராஜேந்திரனின் (U K) மாமனாரும், வேதவல்லி, வள்ளிநாயகி, சச்சிநீலா, பத்மா, கணேசலிங்கம் (சிங்கப்பூர்), சச்சிதானந்தன் (சிங்கப்பூர்), சிவக்கொழுந்து (சிங்கப்பூர்), திருமதி ஸ்கந்தமூர்த்தி (U. K.) ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று [புதன் கிழமை] பிறபகல் இரண்டுமணிக்கு ஆனைக்கோட்டை வீதி, கொக்குவிலில் இடம்பெற்று தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

(614)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegr.mnumber Tephone 22389 - 24126.